சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 13.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **122/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | சரவணன் |
| தந்தை பெயர் | : | முத்துக்கிருஷ்ணன் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | வட்டாட்சியர் |
| வயது | : | 46 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் அறநிலையத்துறையில் வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பாக திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக

பணியிலிருந்தபோது திருவாரூர் மாவட்டம் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த கொடுத்த வேண்டுகோள் கடித்தின் அடிப்படையில் , இவ்வழக்கில் உள்ள 1ம் எதிரி வைத்தியநாதன், 2 வது எதிரி வீரமணி, 3 வது எதிரி மாதவன், ஆகியோர்கள் இந்து - நத்தமர் உடையார் வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும், 4 வது எதிரி ராஜா (எ) நாகராஜன் என்பவர் இந்து - படையாச்சி வகுப்பை வகுப்பை சேர்ந்தவர்கள் என்றும் ஜாதி சான்றிதழ்களை வழங்கினேன். மேற்சொன்ன எதிரிகளுக்குரிய ஜாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ- 2 முதல் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அ.சா.1 செல்வராஜ், அ.சா.2 ஜான்சிராணி, மற்றும் ஆசைத்தம்பி ஆகியோர்கள் இந்து-பறையன் வகுப்பை சேர்ந்தவர்கள் என்று ஜாதி சான்றிதழ்களை வழங்கினேன். அந்த ஜாதி சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ- 6 முதல் அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்மந்தமாக காவல் துணை காண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.13 13:19:41 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.